
# வேதமும் நாமும்



நீர்வை மயூரகிரி

# வேதமும் நாமும்



நீர்வை மயூரகிரி

# நூல் விபரம்

நூல் :- "வேதமும் நாமும்"

ஆசிரியர் :- "வேதாகம யுவரத்னா"

ப்ரம்மஸ்ரீ. தியாக. மயூரகிரிக் குருக்கள்

(நீர்வை மயூரகிரி)

B.A (Cey), Dip. in. Journalism (Merit)

077 8680452

பதிப்புரிமை :- நூலாசிரியர்

பதிப்பு :- 2016 ஆவணி அவிட்டம்

அச்சுப்பதிப்பு:- ஷாம்பவி பதிப்பகம்,

யாழ்ப்பாணம்.

கிளை: நீர்வேலி.

021 222 4143

## உங்களுடன் சில வார்த்தைகள்...

வேதம் என்பது என்ன? வேதம் தோன்றிய காலம் என்ன? வேதத்தில் கூறப்பட்டுள்ள விஷயங்கள் என்ன? என்பவற்றையெல்லாம் அறிய பலரும் ஆவலுறுவார்கள்.

ஆனால் இன்றைக்கு வேதம் பற்றி அறிய நான்கு பேரிடம் வினாவினால் பொதுவில் கிடைக்கின்ற பதில் அல்லது செய்திகள் நமக்கு மேன் மேலும் குழப்பத்தையே உண்டாக்கும்.

ஒவ்வொருவரும் வேதத்தை ஒவ்வொரு விதமாக அணுகுவார்கள். பலரும் பலவிதமாக விமர்சிப்பர். சிலர் எங்களுக்கு வேதமே தேவையில்லை என்று கூடச் சொல்லுவார். இப்படி ஒரு நாத்தீகரோ, கடவுள் மாறுப்பாளரோ சொன்னால் அச்சர்யம் ஏதும் இல்லை.

ஆனால் சைவர் என்றும் இந்து என்றும் தம்மை அடையாளப் படுத்துபவர்களில் சிலர் கூட வேதம் தேவையில்லை எங்களுக்கு ஆகமம் போதும் என்கிறார்கள். அதிலும் சிலரோ, அதுவும் வேண்டாம் நாமே புதிதாக ஒரு வழிபாட்டு முறையை பேணுவோம் என்கிறார்கள்.

இதற்கெல்லாம் காரணம் வேதம் பற்றிய புரிதலின்மையே ஆகும்.

நீங்கள் இணையத்தில் பிரபல தேடற்பொறியான கூகிளில் தேடினாலும் வேதவாக்கு என்றவுடன் பைபிள், திருக்குரான் குறித்த செய்திகளே அதிகம் வரும்.

அவற்றுள் நமது வேதங்கள் குறித்த செய்திகளும் ஆங்காங்கே கிடைக்கலாம்.

இப்படி வேதம் என்றாலே அது பிறசமயச் சார்புடையது என்று எண்ணும் அளவுக்கு சாதாரண இந்து ஒருவரின் சிந்தனை சிதறடிக்கப்படுகின்றது.

இன்னொருபுறம் சாதாரண ஒருவன் வேதம் என்பது ஒரு குறித்த வர்க்கத்திற்குரியது. நமக்குரியதன்று என்று எண்ணுகின்ற அளவுக்கு சில கருத்துக்கள் கூட விதைக்கப்பட்டிருக்கிறன.

வேதத்தை ஏன் மொழி பெயர்க்க கூடாது? என்ற கேள்வியும் பரவலாக கேட்கப்படுகிறது. பொது சமூகத் தொடர்புள்ள ஒருவர் இவ்வாறான வேதம் குறித்த முரணான பலவகை எண்ணங்கள் தமிழரிடம் குறிப்பாக இலங்கைத் தமிழரிடம் நிலவுவதை காணலாம்.

இந்துக்களுக்கே இப்படியான எண்ணங்கள் இருக்கின்றபோது வேற்றுச்சமயிகள் இந்துக்களின் பிரமாணமான வேதம் பற்றி அறிய விரும்பும் போது அவர்கள் இந்து வெறுப்பு நிலையை அடையவே அதிக வாய்ப்பை காண்கின்றோம்.

இது இப்படியிருக்க வேத ஆர்வலர்கள் அல்லது வேதம் கற்றவர்களும் இரு திறத்தவர்களாயுள்ளனர்.

ஒரு சாரார் பாரம்பரிய முறையில் வேதமோத, ஓதுவிக்க கற்கின்றனர். நன்கு பாடம் பண்ணி அழகாக ஓதுகிறார்கள். தமிழகத்தில் இவர்களை அதிகமதிகம் காணலாம். இலங்கையில் இன்று வேதமே கதி என

வாழ்க்கையை கொண்டு நடத்த முடியாத காரணத்தால் இவ்வாறு முழுமையான வேதாத்யாயனகாரர்களை காண்பது கடினம்.

இன்னொரு சாரார் பாரம்பரிய முறையில் வேதம் கற்க விரும்பாதவர்கள் அவர்கள் வேதமோதலை பெரிதும் நாடாது வேத பாஷ்யம் (உரை) அறிவதிலும் வேத நுணுக்கங்களை ஆராய்வதிலும் வேதத்திலுள்ள அறிவியலை சிந்திப்பதிலும் வேதம் குறித்து மேலை நாட்டார், தத்துவவியலாளர்கள் எழுதியவற்றை படித்து விமர்சிப்பதிலும் ஈடுபாடு கொள்கிறார்கள்.

இவர்கள் இரு சாராருடைய சிந்தனைகளும் இணைகிற போது வேதம் சாரார் நெறி வளர வாய்ப்பாகும். வேதத்தை ஒரு சாரார் முழுதும் தங்கள் கட்டுக்குள் வைத்திருக்க விழையும் நிலையும் இன்னொரு சாரர் வேதத்தை சொல்லி பல விநோதங்களை செய்யும் கட்டுடைப்பும் வேதநெறிக்கு ஒவ்வாதன. (உதாரணம்:- அஸ்வமேதம் செய்வதாக ஒன்றை செய்தல்)

சுமார் 1800 ஆண்டே பழையதானபைபிள் கிரேக்கம், எதியோப்பியத்திலிருந்தும் மொழி மாற்றமுறுகின்ற போதே கிறிஸ்தவசபைகளிடையே அதில் எவற்றை எவ்வாறு ஏற்பது? என்பதில் பெருங்குழப்பங்கள் உண்டாக்கி நீடித்து வருகின்றன.

இது இவ்வாறிருக்க சுமார் 7000 ஆண்டுகட்கு மேலே பழையதாக கருதப்படும் வேதம், வேதமரபு, வேதமோதும் வேதியர் மரபு பற்றி சர்ச்சைகளுண்டாவது தவிர்க்க இயலாததே.

எனவே எனது சிற்றறிவுக்கு எட்டிய வகையில் வேதம் பற்றிய சில விடயங்களை பகிர்ந்துள்ளேன்.

இந்நூலை வேதத்தையும், வேதமார்க்கத்தையும், வேதவேள்விகளையும் வேத அறிவியலையும் பேணுவதில் தம் வாழ்வை அர்ப்பணித்து வாழ்ந்த ஆச்சார்யரான "ஸ்ரீவித்யா உபாசகர்" பேராசிரியர் கலாநிதி பிரம்மஸ்ரீ. கா. கைலாசநாதக் குருக்கள் அவர்களது திருவடிகளுக்கு இச்சிறுநூலை பணிவோடு சமர்ப்பிக்கின்றேன்.

இந்த நூல் வெளியீட்டுக்கு பலவகையிலும் இணையவழியிலும் ஆலோசனை வழங்கிய அன்புள்ளங்களுக்கு நன்றிகளை தெரிவிக்கின்றேன்.

மிகக்குறுகிய காலத்தில் இந்நூலை திறம்பட பதிப்பித்த ஷாம்பவி பதிப்பகத்தாருக்கும் நமது நன்றிகள்.

இந்த ஆண்டு (2016) ஆவணிப் பௌர்ணமி (ஆவணி அவிட்டம்) திருநாளையொட்டி பதிப்பிக்கப் பெற்ற இந் நூலை யாவரும் பெற்று படித்து தங்கள் கருத்தை இளைஞனான அடியேனுக்கு தெரிவிக்க வேண்டுகின்றேன். தங்களின் மேலான ஆதரவை என்றும் வேண்டுகின்றேன்.

வேதமாதாவும் வேதநாதனும் வேத வியாசரும் வேத வழி நிற்கும் ஆச்சார்யர்களும் நம்மை நேரிய நன்நெறியில் செலுத்த பிரார்த்திப்போமாக.

"வெத நெறி தழைத்தோங்குக"

அடியேன்,
மயூரகிரி.

# 1. வேதத்திற்கும் வேதியருக்குமான விழா

வித் என்ற வினையடியில் உருவானது வேதம் என்ற சொல். இந்த வித் என்பதற்கு அறிதல் என்று பொருள். ஆக, வேதம் என்பதற்கு உயர்ந்த அறிவு என்று பொருள் கொள்வர்.

ஸ்ருதி, திருமறை என்றெல்லாம் போற்றப்படும் வேதங்கள் நான்கு. அவை ரிக், யஜுர், சாமம், அதர்வணம் என்பனவாகும் என்பது யாவரும் அறிந்ததே. சதுர்வேதம் எனப்படும் இவற்றை 'நால்வேதம்' என்று திருமுறைகள் போற்றுகின்றன.

பொது சகாப்தத்திற்கு முன் (கி.மு) 5000 ஆண்டுகளுக்கு முன்னரே, அதாவது இற்றைக்கு ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, இன்று வேதங்கள் எப்படி, எந்த வடிவில் அமைந்திருக்கின்றனவோ அதே வடிவில் நால்வேதங்களும் அமைந்திருந்ததாக சுவாமி விவேகானந்தர் குறிப்பிட்டிருக்கின்றார்.

வேதத்திற்கு ஒலி மிக முக்கியமானது. அந்த வேதச்சொற்களுக்கும் அவற்றை உச்சரிக்கின்ற போது எழுகின்ற சப்தத்திற்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது.

அதாவது எப்படி ஒலியை வைத்து புகையிரதம், பேருந்து, முச்சக்கரவண்டி என்று பிரித்தறிகின்றோமோ? அதே போல அம்புலன்ஸ் ஹோன் வைத்துக்கொண்டு

எல்லா வாகனங்களும் வழி விடுகின்றதோ? பொருள் என்பதற்கு முதன்மை இல்லாமல் இவைகள் எல்லாம் எப்படிப்பயன் கொடுக்கின்றதோ? அதனைப் போல வேத சப்தமே முதன்மை மிக்கதாக விளங்குகின்றது.

எனினும், இந்த வேதங்களின் பொருளை அறிந்து கொள்வதும் சிறப்புடைய ஒன்றாகவே நம்முடைய முன்னோர்களால் கருதப்பட்டிருக்கின்றது. ஆயினும் அது மிகவும் கடினமான ஒன்றாகவும் விளங்குகின்றது.

ஏனெனில் சமஸ்கிருதம் என்றும் வடமொழி என்றும் கருதப்படுகின்ற மொழிக்கும் முன்னையதான மிகத்தொன்மை வாய்ந்த பல்லாயிரம் ஆண்டு பழமைமிக்க வேத மொழியை புரிந்து கொள்வதும் அதற்கு விளக்கம் பெற்றுக்கொள்வதும் மிகவும் கடினமான ஒன்றாகும். அதனால் இது குறித்து பல விதமான ஆய்வுகளும் பல வித குழப்பமான செய்திகளும் வந்து கொண்டே இருக்கின்றன.

உலகின் மிகத்தொன்மை வாய்ந்த இலக்கிய வடிவமான வேத இலக்கியத்தை மொழிபெயர்க்கலாமே? என்று நினைக்கிறவர்களுக்கு இதில் உள்ள சிக்கல்களை சற்றே சிந்தித்தால் அது எவ்வளவு கடினமானது புரிந்து கொள்ளமுடியும்.

ஆயினும் சாயனாச்சார்யர் என்கிற சாயனர் 'வேதார்த்தப்ரகாசா' என்றொரு வேதத்திற்கான உரை நூலை எழுதியுள்ளார். அவ்வாறே சதபதப்ரமாணம் என்ற நூலும் வேத அர்த்தத்தைப் பேசும் நூலே ஆகும்.

சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த ஜம்புநாதன் என்ற அறிஞரும், அண்ணா என்ற பிரபலமான அறிஞரும் வேதங்களில் குறிப்பிடத்தக்கவற்றின் பொருளை தமிழில் எழுத முயன்றிருக்கின்றார்கள். இவற்றில் அண்ணா அவர்களுடைய எழுத்து மயிலாப்பூர் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வெளியீடாக பல நூல்களாக வெளிவந்திருக்கின்றது. விவேகானந்தர் போன்ற ஆச்சார்யர்களின் கருத்தை உள்வாங்கிய அற்புதமான நடையில் அது விளங்குவதை அவதானிக்கலாம்.

ஆயினும், பழமையான நூல்களில் சொல்லப்படுகின்ற அளவுக்கு இன்றைக்கு வேதசாகைகள் இல்லை. பல்வேறு வேத சாகைகளும் (அதாவது வேதப்பகுதிகளும், அதனைப் பேணும் சமூகங்களும்) அழிந்து விட்டன. ஆயினும் இன்று நமக்கு கிடைப்பனவே மிகவும் நீண்டதாயும், கற்றுக்கொள்ள கடினமானதாகவுமே இருக்கின்றது.

இந்த வேதங்களை தொகுத்து இன்றிருக்கும் நிலையில் நால் வேதங்களாகப் பகுத்தளித்ததில் அளப்பரிய பங்காற்றியவர் வேத வியாச மஹாமுனிவர். இன்று வேதங்கள் உலகில் நிலவுவதற்கே காரணம் வேதவியாச பகவானே. திருமாலின் அவதாரமாகவும் கருதப்படும் இம்மாமுனிவர் பராசரமுனிவருக்கும் மீனவப்பெண்ணான மத்ஸ்யகந்திக்கும் பிறந்தவராவார்.

ஆக, வேதம் என்பது ஜாதி, இன, மொழி பேதங்களுக்கு அப்பால் இந்துக்கள் யாவருக்கும் உரிய அரிய உன்னதமான பொக்கிஷமாக திகழ்கின்றது.

## 2. தமிழும் தமிழரும் வேதமும்

இப்போதெல்லாம் தமிழருக்கும் வேதத்திற்கும் சம்பந்தமே இல்லை என்பது போன்ற ஒரு கருத்து நிலவி வருகின்றது.

ஆனால், தமிழர்கள் மிகப்பழமையான காலத்திலேயே வேதஞானம் மிக்கவர்களாகவும், வேதத்தை போற்றுபவர்களாகவும் வேதவேள்விகளை ஆற்றுபவர்களாகவுமே திகழ்ந்திருக்கின்றார்கள்.

தமிழிலக்கண நூல்களில் காலத்தால் முந்தைய 'தொல்காப்பியத்தை' அங்கீகரித்தவர்களுள் ஒருவரான அதங்கோட்டாசான் என்பவர் சதுர்வேதபண்டிதரான தமிழராவார். ஆதனால் அவர் "நான்மறை முற்றிய அதங்கோட்டாசான்" என்று போற்றப்படுகின்றார்.

சங்ககாலத்திலேயே வேத வேள்விகள் தமிழ்நாடெங்கும் மலிந்திருந்தன. இதற்கு கல்வெட்டு மற்றும் தொல்பொருட்சான்றுகள் பலவும் கிடைத்துள்ளன. இதனை விட, தமிழிலக்கியங்களில் அதற்கான பதிவுகள் பலவுள.

சங்ககாலத்தைச் சேர்ந்த பாண்டிய மன்னனான முதுகுடுமிப்பெருவழுதி பல்வேறு வேத யாகங்களையும் இயற்றியதால் 'பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதி' எனப்போற்றப்பட்டான்.

கரிகால சோழன் காலக்கல்வெட்டு ஒன்றில் இப்படிப் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. அதாவது,

"பாத்ராகலித வேதானாம் சாஸ்த்ர மார்க்கானுஸாரிணாம்
ததேது அரிகாலஸ்ய கரிகாலஸ்ய சாஸனம்"

அதாவது, 'வேத சாஸ்திரங்களை மதிக்காதவர்களே கரிகாலனின் விரோதிகளாவர். அப்படி வேதத்தை மதிக்காதவர்களுக்கு கரிகாலன் காலன் போன்றவனாவான்.' என்பது இதன் பொருளாகும்.

அதே போல, திருக்குறள் 'தமிழ் மறை' எனப்படுகின்றது. அவ்வாறு சொல்லப்படுகின்ற போதே, ஏன்? தமிழ் என்கிற சொல்லை முன்னிட்டு மறை என்கிறார்கள் என்றால்? வேறு மறை இருக்கிறது என்று தானே பொருள். அதுவே வேதம் ஆகும்.

இப்படி தமிழ் மறை படைத்த திருவள்ளுவரும் வேதம் கற்றவராகவும், வேத விதிகளில் ஈடுபாடும் நம்பிக்கையும் கொண்டவராகவும் திகழ்ந்தார் என்பதற்கும் திருக்குறளில் நிறைய இடங்களில் சான்றுகள் உள்ளன. உதாரணமாக பிதிர்வழிபாட்டை வள்ளுவரும் வலியுறுத்துகின்றார். அவர்களை வேத மரபுப்படி 'தென்புலத்தார்' என்று சொல்கின்றார்.

'மறப்பினும் ஓத்துக்கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக்கெடும்' என்கிறார்.

இதனை விட,

'அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல்' (543)

என்றும்,

''ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனில் (560)

என்றும் குறிப்பிடுகிறார்.

அதனைப் போலவே, வேதவேள்விகளினைப் போற்றும் வள்ளுவர் வேதவேள்விகளுள் பாகவேள்விகளில் உயிர்க்கொலை நிகழ்வதை தவிர்க்குமாறும், குறிப்பிடுகின்றார்.

'அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின், ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று' (259)

ஆக, இது கூட அக்காலத்திலேயே வேதவேள்விகள் சிறப்புற்றிருந்ததையே காட்டுகின்றன.

சைவசமய குரவர்களுள் முதன்மை பெற்றவரான திருஞானசம்பந்தப்பெருமான் "வேதத்தில் உள்ளது நீறு" என்றும், "வேதம் நான்கிலும் மெய்பொருளாவது நாதன் நாமம் நமச்சிவாயவே" என்றும் பலவாறாக வேதப் பொருளை சைவத்தோடும் சிவத்தோடும் இணைத்தே பாடியிருக்கிறார். அத்துடன் வேதத்தை இகழ்வோரை பதிகம் தோறும் பத்தாவது திருப்பாடலில் சாடியும் பாடியுள்ளார்.

இது தவிர "கற்றாங்கெரியோம்பிக் கலியை வாராமே செற்றார் வாழ் தில்லைச்சிற்றம்பலம்", "வேதமும் வேள்வியும் ஆயினார்", "வேதமோதி வெண்ணூல் பூண்டு வெள்ளை எருதேறிப்பூதம் சூழப்பொலிய வருவார்" என்பது போன்ற வேதத்தை முதன்மை செய்கிற பல செய்திகளை திருமுறைகளில் எண்ணற்ற பல்வேறு இடங்களில் நாம் கண்டு அனுபவிக்கலாம்.

இவ்வாறே திருமந்திரமும் "வேதமோடாகமம் மெய்யாம் இறைவன் நூல்" என்கிறது. இதனைப் போலவே தமிழில் எழுந்த ஐம்பெருங்காவியங்களில் தலைசிறந்த சிலப்பதிகாரம் காவிய நாயகியான கண்ணகையின் திருமணம்
"மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிட" என்று வேத விதிப்படி நடந்ததாகவே சொல்கின்றது.

எல்லா தர்மங்களுக்கும் ஆதாரமாக விளங்குவது வேதமே. எப்படி பெரு விருட்சத்திற்கு ஆதாரமாக வேர்கள் கண்ணுக்குப் புலப்படாமல் நிற்கின்றனவோ, அதனைப் போல இந்து தர்மம் மற்றும் நமது கலை, கலாச்சார விழுமியங்கள் யாவற்றுக்கும் வேர்களாக வேதங்களே மிளிர்கின்றன. அதனாலேயே "வேதத்தை விட்ட அறமில்லை" என்று சொன்னார்கள்.

இவ்வாறான வேதங்களுக்கும் தமிழுக்கும் கணிக்க முடியா காலம் தொட்டு நீண்ட தொடர்பு நிலைத்து வருகின்றது. இவ்வாறே சைவநெறிக்கும்

வேதத்திற்கும் பிரிக்க இயலாத் தொடர்பு நிலைத்திருக்கிறது. இதனை உணர்ந்தே சேக்கிழார் பெருமான்

"வேதநெறி தழைத்தோங்க, மிகு சைவத்துறை விளங்க" என்று பாடியுள்ளார்.

## வேதப் பொருள்

வேத பாஷ்யம் எனப்படும் வேதத்தின் பொருளை அறியவும் பலரும் முற்பட்டுள்ளனர். இது ஒரு பகீரத பிராயத்தனமாகும்.

மத்வர், ஸ்கந்தஸ்வாமி, பட்டபாஸ்கரர், தயானந்த சரஸ்வதி, அரவிந்தகோஷ், கபாலி சாஸ்திரி, சாயணர் போன்ற பலரும் வேதத்தின் சில பல பாகங்களுக்கு உரை எழுதியுள்ளனர்.

வேத ஒலிக்கே மகத்துவம் இருப்பினும் வேதத்தின் பொருளை அறிவதும் அவசியம் என்பது காஞ்சி பரமாச்சார்யார் அவர்களின் ஆணித்தரமான கருத்து.

## 3. வேதியர் யார்?

தமிழில் உள்ள திருமுறைகள் இறைவனை "வேதியன்" என்று அழைக்கின்றன. மறைநாவர் என்றும் வேதமொழியர் என்றும் தூமறை பாடும் வாயர் என்றும் வேதியன் என்றும் சொல் துணை வேதியன் என்றும் அவை இறைவனைப் பேசுகின்றன.

ஆகவே, வேதியர் என்ற சொல் ஒரு வினைச்சொல் ஆகும். வேதத்தை குரு முகமாகப் பெற்று கற்று அதனை ஓதி, வேத வழி ஒழுகுபவர்கள் யாவராயினும் அவர்கள் வேதியர் எனப்படுவர். அதனாலேயே ஆகம அறிவுடன் வேதாத்யாயனமும் செய்யும் சிவாச்சார்யர்களை 'சிவவேதியர்' என்று அழைத்தனர்.

எனவே, புறச்சமய நெருக்கடிகளாலும், வேற்று நாட்டு அரசுகள் நம் தேசங்கள் மீது அடிக்கடி முற்றுகையிட்டு நம் இந்துத்திருக்கோயில்களை தகர்த்து வேத மரபைச்சிதைக்க முற்பட்டதாலும், வேதத்தை காக்கும் பொருட்டு பழைமையான காலத்தில் ஒரு சமூகத்தை வேதங்களை கற்றும் கற்பித்தும் அவற்றை அழியாமல் பாதுகாப்பதற்காக உருவாக்கி வைத்தனர் என்று கருத முடியும்.

இவ்வாறு பல்வேறு சட்டதிட்டங்களைப் போட்டு வேதத்தைப் பேணியமை காரணமாகவே, புராணங்களைப் போல இடைச்செருகல்களோ, திரிபு, சிதைவுகளோ இன்றி

தூய்மையான வேதத்தை இன்றும் நாம் காணவும் கேட்கவும் முடிகின்றது.

இவ்வாறு வேதத்தை பேணுவதையே வாழ்வின் இலட்சியமாக கொண்டவர்களை கௌரவிக்கும் முகமாக அவர்களுக்கு பல்வேறு அரசர்களும் மானியங்கள், கொடைகள் வழங்கி வந்திருக்கின்றார்கள். அவற்றில் 'சதுர்வேதி மங்கலம்' என்ற கிராம நன்கொடை குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கை வரலாற்றில் சிங்கள அரசசபைகளில் கூட, வேதஞானம் மிக்க வேதியர்கள் சீரிய ஆலோசகர்களாக திகழ்ந்திருப்பதையும், சிங்கள மன்னர்களின் மரியாதைக்குரியவர்களாக மிளிர்ந்திருப்பதையும் நாம் காணலாம்.

இதைப் போல, வேதத்தை சற்றும் தளர்வின்றிக் காப்பதற்காக பதம், க்ரமம், ஜடை, மாலா, சிகா, ரேகா, த்வஜம், தண்டம், ரதம், கனம் என்று பலவிதமான கணக்குகளில் மடக்குகளில் சொல்லி வரும் மரபும் பேணப்பட்டது. இன்றும் அவற்றை காணலாம். இவற்றை ஜடாபாடம், கனபாடம், க்ரமபாடம் என்று சொல்லுவார்கள். இவ்வாறு வேதத்தை க்ரமபாடமாக சிறப்பாக சொல்லவல்லவர் 'க்ரமவித்' என்றும் ஜடா பாடமாக சொல்லவல்லவர் 'ஜடாவல்லபன்' என்றும், கனபாடம் வரை கற்றவரை 'கனபாடிகள்' என்றும் சொல்லுவர். போற்றுவர்.

இவ்வாறே வேதத்தை முழுமையாக கற்க இயலாத நிலையில் ப்ராமண சமூகத்தை வேதம் பேண நிர்ணயித்த சமூகமானது அவர்களையும் பிரித்து யஜுர் வேதிகள், ரிக் வேதிகள், சாமவேதிகள், அதர்வணவேதிகள் என்று தமக்குரிய குறித்த ஒரு வேதத்தையாவது கற்க வேண்டும் என்று வகுத்தது. அதிலும், பின் இரு வகை வேதசாகைகளை உடையவர்களையும் இன்று நாம் காண்பது மிக மிக கடினம். இலங்கையில் இவர்கள் இல்லை என்றே சொல்லலாம். ரிக்- யஜுர் வேதிகளை நாம் காணலாம். அதிலும் யஜுர் வேதமானது சுக்ல- கிருஷ்ண என்று இருவகைப்படுகிறது. இலங்கையிலும் தமிழகத்திலும் கிருஷ்ண யஜுர் வேதிகளையே அதிகளவில் காண முடியும்.

இவ்வாறு தமக்குரிய வேதத்தை கற்பதே மிகக்கடினமான சூழலில் சிலர் இரண்டு, மூன்று, நான்கு என்று வேதங்களை கற்றுக்கொள்வார்கள். அவர்களை த்விவேதி, த்ரிவேதி, சதுர்வேதி என்று சமூகம் கொண்டாடியது.

இது இவ்வாறிருக்க இப்படி வேதம் கற்ற வேதியர்கள் பழங்காலம் தொட்டு தமிழர்களிடையே வாழ்ந்து வருகின்றார்களா? என்றால் ஆம் என்றே சொல்ல வேண்டியுள்ளது. அதற்கு பல ஆதாரங்கள் உள. எவ்வாறு திருமுறைகளையும், நாலாயிரம் திவ்ய பிரபந்தத்தையும் ஓதுவதற்கு ஓதுவார்கள் இருந்தார்களோ, அவர்களைப் போல, இன்னும்

இத்திருமுறைகளும் திவ்ய பிரபந்தமும் தோன்றிய காலத்திற்கு ஆயிரமாண்டுகளுக்கு முன்னரே வேதம் ஓதும் வேதியர்கள் கோயில்கள் தோறும் இருந்தார்கள்.

அறுதொழில் வல்லவர்களான வேதியர்கள் மறைநூல் வல்லவர்களானதால் மறையோர் என்றும், விரிந்த பார்வையுடையவர்களாதலில் பார்ப்பனர்கள் என்றும் செந்தண்மை பூண்டு அறம் காத்தலால் அந்தணர்கள் என்றும் பிரம்மத்தை உணர்ந்து ப்ரம்மத்துவத்தை பரப்பியதால் ப்ராஹ்மணர்கள் என்றும் அழைக்கப்பட்டனர்.

இவ்வாறு உயர்ந்த செயல்களைச் செய்யும் எவரும் போற்றுதலுக்கும் வணக்கத்திற்கும் உரியவர்களே என்கிற அடிப்படையிலேயே "வேதம் அறிந்த வேதியர்களின் திருவடிகளில் பட்ட நீரால் நனைகிற நமது இல்லம் செழிப்புறும்" என்ற நம்பிக்கை வளர்ந்திருக்கிறது. வேதம் அறிந்தவர்களுக்கு அளிக்கப்படுகிற தானமும் வணக்கமும் பன்மடங்காக பரிணமிக்கும் சிறப்புடையது என்று நீதிநூல்கள் பேசின. ஆக, இவ்வாறான சிறப்புகளை எல்லாம் தந்ததும் தரவல்லதும் வேதமே என்பது வெளிப்படை.

இவ்வாறு சிறப்புடையதாக விளங்கிய "வேதம்" என்ற சொல்லை பிற சமயிகளும் தங்கள் சமய முதல்நூலுக்கு வைத்துச் சொன்னார்கள். இன்றைக்கு இலங்கையில் "வேதக்காரர்" என்றால் கிறிஸ்தவர் என்கிற நிலைக்கு இது போயிருக்கிறது. உண்மையில்

"வேதக்காரர்" என்றால் அது வேதியரான ப்ராம் மணர்களைக் குறிக்கும் சொல்லாதலே சரியானதாகும்.

இந்த வேதியர் வேத வழி வேள்வி ஆற்றி வெற்றி பெறுவோர் என்று பழந்தமிழ்நூலான புறப்பொருள் வெண்பா மாலை குறிப்பிடுகின்றது.

"கேள்வியால் சிறப்பு எய்தியானை
வேள்வியால் விறல் மிகுத்தன்று" என்கிறது அது.

சங்ககாலத்திலேயே வேதம் வல்ல வேதியர் களும் அவர்கள் வழி வந்தவர்களும் வேதாத்யாயனம் செய்பவர்களாகவும் அதே வேளையில் தமிழ் வல்லவர்களாகவும் திகழ்ந்திருக்கிறார்கள். அகத்தியர் போன்ற ஏராளமானவர்கள் இத்திறமுடையவர்களேயாவர். கேளணியர் என்கிற கௌண்டின்ய கோத்திரத்தவர்களான பல தமிழ்ப்புலவர்களை சங்ககாலம் தொட்டு நாம் காணலாம். ஞானசம்பந்தப்பெருமானும் அவ்வழி வந்தவரே.

சங்ககால பழந்தமிழ் நூலான புறநானூற்றிலுள்ள 166ம் பாடல் சிவபெருமானை 'முதுமுதல்வன்' என்றும், வேதத்தை 'முதுநூல்' என்றும், குறிப்பிடுவதுடன் ஆறங்கமான வியாகரணம், சோதிடம், நிருத்தம், சிகை, சந்தம், கல்பம் என்பவற்றையும், மூ ஏழ் துறை என்று இருபத்தொரு வேத வேள்விகள் குறித்தும் பேசுகின்றது. அந்த இருபத்தொரு வேள்விகளானவை முறையே,

சோமவேள்விகள் ஏழு அவையாவன- அக்னிஷ்டோமம், அதியக்னிஷ்டோமம், உக்தியம், சோடசி, வாஜபேயம், அதிராத்திரம், அப்தோர்யாமம் என்பனவாகும்.

அவிர் வேள்விகள் ஏழு அவையாவன- அக்னியாதேயம், அக்னிஹோத்திரம், தர்சபூர்ணமாசம், சாதுர்மாஸ்யம், நிரூடபசுபந்தம், ஆக்கிரயணம், சௌராத்திரமணி என்பனவாகும்.

பாகவேள்விகள் ஏழு அவையாவன- அஷ்டகை, அபார்வணம், சிராத்தம், சிராவணி, ஆக்கிரகாயணி, சைத்திரி, ஆச்வயுஜி என்பனவாகும். இந்த பாகவேள்விகளான ஏழில் மட்டும் மிருகபலி கொடுக்கப்பட்டதால் இதை ஊன்வேள்விகள் என்றும் குறிப்பிடுவர்.

ஆக, மொத்தம் இருபத்தியொன்று.
அப்பாடல் வருமாறு,

'நன்று ஆய்ந்த நீள் நிமிர்சடை
முது முதல்வன் வாய் போகாது
ஒன்று புரிந்த ஈர் இரண்டின்
ஆறு உணர்ந்த ஒரு முதுநூல்
இகல் கொண்டோர் மிகல் சாய்மார்
மெய் அன்ன பொய் உணர்ந்து
பொய் ஓராது மெய் கொளீஇ
மூஏழ் துறையும் முட்டின்று போகிய
உரைசால் சிறப்பின் உரவோன் மருக!' (புறம்- 166)

இப்பாடல் சோணாட்டுப் பூஞ்சாற்றூர்ப்பார்ப்பான் கௌணியன் விண்ணாய்ந்தானை, ஆவூர் மூலங்கிளார் விளித்த விளி.

இவ்வாறு சங்ககாலத்திலேயே பெருவழக்கில் தமிழ்கூறும் நல்லுலகில் நடைமுறையில் இருந்த பெருவேள்விகள் பலவும் இன்று இல்லாமற் போயின. சிற்சில மட்டும் சில இடங்களில் நடைமுறைப்படுத்தப் படுகின்றன.

உதாரணமாக சோமயாகங்களை சிவபரமாகச் செய்து சிவப்பேறு பெற்ற நாயனார் சோமாசிமாறநாயனார். அதே போல அக்னிஹோத்திரத்தை செய்கிற சிற்சிலர் இன்றைக்கும் இந்தியாவில் ஆங்காங்கு உள்ளனர். இவர்களை அக்னிஹோத்திரிகள் என்பர். இவ்வாறான அக்னி ஹோத்திரி ஒருவரின் வீடு போபால் விச வாயுத்தாக்கத்தின் போது எவ்வித பாதிப்பிற்கும் உள்ளாகாமல் தப்பியதுடன் அங்கு வாழ்ந்தவர்களும் உடல்நலமுடன் திகழ்ந்தமை மிகப்பிரசித்தமான அற்புதமாகும்.

அதே போல, முன்னாள் பாரதப்பிரதமர் வாஜ்பேயி அவர்களின் முன்னோர் வாஜபேய யாகம் செய்தவர்கள் என்றும், அதனாலேயே வாஜ்பேயி என்று பெயரிட்டார்கள் என்றும் சொல்லுவர்.

ஆக, வேதம் தம்மை கற்றவர்களுக்கும் கற்பிப்பவர்களுக்கும் நலமே செய்தது. அவ்வாறு கற்றும் கற்பித்தும் வேத வழி ஒழுகியவர்கள் வேதியர் எனப்பட்டார்கள் என்பதும் தெளிவு.

## இலங்கையில் வேதக் கல்வி

சென்ற நூற்றாண்டில் தமிழக அறிஞர்கள் பலர் இங்கேயே தங்கியிருந்து தம்மை முழுமையாக அர்ப்பணித்து வேதபாடத்தை புகட்டி வந்தனர்.

நியாய சிரோமணி சுப்பிரமண்யசாஸ் திரிகள், வியாகர சிரோமணி சீதாராமசாஸ்திரிகள் போன்றோர் இத்தகு வேத ஆச்சார்யர்களாவர். பேராசிரியர். கா.கைலாசநாதக்குருக்கள் அவர்களும் தம் ஓய்வு நேரத்தில் வேதக்கல்வியை புகட்டினார்

சிவாச்சார்யர்களில் பலர் ஆகம, தர்மசாஸ்திர, சமஸ்கிருத கல்வியை அளித்த அவ்வேளை வேத ஞானத்தையும் ஒரு சிலர் கற்பித்து வந்துள்ளனர்.

இவ்வகையில் இணுவில் வட்டுவினிப் பதியில் தர்ம குருகுலம் ஸ்தாபித்து வேத அறிவை ஊட்டி வருபவர் தா. மகாதேவவாத்யார் அவர்களா வார். நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு இலவச மாக வேத அறிவை வழங்கிய, இன்றும் வழங்கும் தா. மகாதேவக் குருக்களை அவரது வேத அத்யாயன வேதக்கல்விக்காக எவ்வளவு போற்றினும் தகும்.

## 4. வேதத்திற்கான விழா

வேதத்திற்கு தினம் தினம் திருநாளே. வேதமோதுவது வேதியரின் தினக்கடன்களுள் ஒன்று. இந்தியாவின் சில ஊர்களில் வீதிகள் தோறும் குறிப்பிட்ட சில நாட்களிலேனும் வீதிப்பஜனை செய்வது போல, வேதபாராயணம் செய்வது வழக்கமாக கூட இருக்கிறது.

ஆயினும், சிறப்பாக வேதத்திற்கு ஒரு திருநாள் என்றால் அதனை ஆவணி அவிட்டம் என்று சட்டென்று சொல்லலாம். ஏனெனில் வேதத்தினை ரிஷிகள் இயற்றவில்லை. வேதம் வேதமுதல்வனான சர்வேஸ்வரனின் சங்கல்பத்தில் பிறந்தது என்று நம்பப்படுவது.

"ஸோ காமாயத! பஹுஸ்யாம் ப்ரஜா யேயேதி!" என்று வேதமே அதைச் சொல்கிறது.

அவ்வாறு சங்கல்பித்துக் கொண்ட பரம்பொருளானவர் முதலில் பிரம்மாவுக்கு அதனை சங்கல்ப வாயிலாக வெளிப்படுத்தினார். பிரம்மா பிறகு தான் பெற்ற வேதத்தை பிரஜாபதிகளுக்கு உபதேசித்தார்.

ஆக, முதலில் பிரம்மா இறைவனிடமிருந்து வேதத்தை உபதேசமாக பெற்ற திருநாளாக ஆவணி அவிட்டம் கொண்டாடப்படுகின்றது.

ஆடி அமாவாசைக்கு அடுத்து வரும் பௌர்ணமியன்று கொண்டாட வேண்டும் ஆபஸ்தம்பர்

போன்ற மாமுனிவர்களால் வரையறுக்கப்பட்ட திருநாளில் எல்லா வேதியர்களும் இந்த ஆவணி அவிட்ட பௌர்ணமியை அனுசரிக்கிறார்கள்.

அறிவிலும் ஆற்றலிலும் குறைந்த நம்மைப் போன்ற மனிதர்கள் வேதத்தை பாராயணம் செய்வதால் வேதத்திற்கே 'பழையது' என்கிற தோஷம் உண்டாகுமாம். ஆதை 'யாதயாமதோஷம்' என்பர். இந்த தோஷம் நீங்க இந்த ஆவணி அவிட்டத்தில் உபாகர்மம் என்கிற உன்னதமான சடங்கைச் செய்வார்கள்.

கோயில்களில் அதன் புனிதத்துவம் கெடாமல் தொடர்ந்து நிலைப்பதற்கு எப்படி குறிப்பிட்ட காலம் தேர்றும் மஹோத்ஸவம், பவித்திரோத்ஸவம், திருக்குடநன்னீராட்டுப்பெருவிழா என்று செய்கிறார்களோ, அதே போல, வேதியர்கள் தம்மை வேத வாழ்வியலுக்குள் புதுப்பித்துக்கொள்ளும் ஒரு நன்னாள் ஆவணி அவிட்டத்திருநாள்.

அன்றைக்கு வேதியர்கள் யாவரும் புதுப்பூணூல் மாற்றிக் கொள்வார்கள். விரதம் அனுசரிப்பார்கள். மஹாசங்கல்பம் செய்வார்கள். பாபநிவர்த்திக்கு ஜெபங்களை செய்வார்கள். காயத்திரி மஹாமந்த்ர ஜெபம் செய்வார்கள். வேதாரம்பம் செய்து கொண்டு வேதாத்யாயனத்தை ஆரம்பிப்பார்கள்.

எனவே, இத்தகு உயர்ந்த புண்ணியமான நாளில் வேதியர்கள் வேதத்திற்காக பண்டிகை கொண்டாடி மகிழ்வார்கள். வேதத்தை வகுத்துத் தந்த வேத வியாச பகவானை கும்பத்தில் ஆவாஹனம் செய்து பூஜை செய்வார்கள்.

ஆக, இந்த ஒரு நாளிலாவது பஞ்சாங்கங்களில் சுபமுகூர்த்தங்களை குறிப்பதை தவிர்க்க வேண்டும். வேதியர்கள் தம்மை சுயபரிசோதனை செய்து தம்மை புதுப்பித்துக் கொண்டு வேத வாழ்வியலில் ஈடுபட அனுமதிக்க வேண்டும். அவ்வாறு செய்வதனூடாக அந்த வேதியர்களின் வாழ்வு பிரகாசிப்பதுடன், அவ்வேதியர்கள் வாயிலாக பிறர் நடாத்துவிக்கிற கிரியைகளும் பிரகாசமாக அமையும் எனலாம்.

## உபாகர்மம்

ஆவணி மாத பௌர்ணமி தொட்டு தை மாதம் வரை வேதாத்யாயனம் செய்வது பழைய மரபு. அதன் ஆரம்ப நிகழ்வே உபாகர்மம். இருக்கு வேதிகள் ஆவணி ஓணத்திலும் யஜுர் வேதிகள் ஆவணி பௌர்ணமியிலும், சாம வேதிகள் அதை அடுத்த வரும் ஹஸ்த நட்சத்திரத்திலும் உபாகர்மம் செய்வர். இதுவே வேதத்திற்கான திருநாள் ஆகும்.

புதுப் பூணூல் மாற்றிக் கொண்டு வேதப்படிப்பை ஆவணியில் ஆரம்பித்து தை வரை மேற்கொள்வர். பிற ஏழு மாதமும் ஜோதிடம், மொழி, பிறகலைகளை கற்பர். உண்மையில் இது அந்தணர்கள் மட்டுமன்றி பிறரும் கொண்டாடும் நாளாகும். அரசரான இராமரும் யாதவ குலதீபமான கிருஷ்ணரும் கூட உபாகர்மம் செய்ததாக வைதீக ஸ்ரீ கூறுகின்றது.

## 5. பூணூல் (யக்ஞோபவீதம்)

தமிழ்நாட்டு அரசியல்வாதிகளில் சிலர் முதலாக பலர் பூணூல் என்பது பிராமண ஜாதிச்சின்னம் என்று சொல்லித்திரிகிறார்கள். பூணூல் அறுப்பது எங்கள் தொழில் என்று சு.ப.வீரபாண்டியன் என்கிற தி.மு.க கட்சியின் பேர்? அறிஞர் ஒரு வாரத்திற்கு முன்னர் சொல்லி சர்ச்சைக்குள் மாட்டிக் கொண்டார்.

உண்மையில் பூணூல் என்பது பிராம்மணர்களின் உடமையா? அது ஜாதிச் சின்னமா? என்றால் அன்றும் அப்படி இல்லை. இன்றும் அப்படி இல்லை. வேத இதிஹாச காலங்களில் பிராம்மணர் மட்டுமன்றி சத்திரியர், வைசியர் முதலிய பிற வருணத்தார்களும் பூணூல் அணிந்திருந்தார்கள். இன்றைக்கும் பூணூலை பலரும் அணிகிறார்கள்.

இலங்கையில் கூட பிராம்மணர்கள் மட்டுமன்றி சைவக்குருமார் என்ற வகுப்பினர், புஷ்பகைங்கர் யகாரர்கள், வீரசைவர்கள், விஸ்வகர்ம குலத்தவர்கள், சிற்பிகள், ஸ்தபதிகள், சில செட்டிமார்கள் என்று பலரும் பூணூல் அணிந்திருப்பதைப் பார்க்கலாம். இவர்களை தவிர அனைவருமே கல்யாணம் முதலிய சுபநிகழ்வுகளிலும், பிதிர் கார்யங்களிலும் பூணூல் அணிகிறார்கள். இப்போது கல்யாணத்தில் அணிவது மேலாடை அணிவதால் நின்று விட்டாலும், அபரக்கிரியைகளின் போது கட்டாயம் அணிந்து கொள்கிறார்கள்.

இதை விட, இந்தியாவில் ஆர்யசமாஜம், பிரம்மசமாஜம் போன்ற இயக்கங்களாலும் பாரதியார் போன்ற புரட்சியாளர்களாலும் பலருக்கும் பூணூல் அணிவிக்கப்பட்டிருக்கிறது.

எவ்வாறாயினும், பூணூல் என்பது என்ன என்று அறிவது பயனுடையதாகும். இதை முப்புரிநூல், யக்ஞோபவீதம் என்றெல்லாமும் அழைப்பர். பருத்தியாலான இந்நூலை இடது தோளிலிருந்து வலது இடுப்பு வழியே உடலின் குறுக்காக அணிந்திருப்பர். மாலை போன்ற அமைப்பிலுள்ள இப்பூணூலின் நூல்களை இணைக்கும் முடிச்சில் மஞ்சள் பூசிக்கொள்வதும் சம்ப்ரதாயம்.

இந்த மூன்று புரிகளும் காயத்திரி, சாவித்திரி, சரஸ்வதி ஆகிய தேவியரைக்குறிப்பன. அத்துடன் அணிந்திருப்பவர் மனம், வாக்கு, காயம் ஆகியவற்றில் தூய்மையோடு இருக்க வேண்டும் என்பதையும் சுட்டுவன. இப்பூணூலை மூன்று விதமாக அணிவர்.



நேர்முறை- வழமையான முறையில் இடது தோளிலிருந்து வலது இடுப்பு வரை அணிவது. சாதாரண காலங்களிலும், கடவுளர், தேவர்களை பூஜிக்கும் போதும் இப்படி அணிந்திருப்பர்.

வலது பக்கம்- பிதிர்களான முன்னோர்கள், இறந்தவர்களுக்கான கிரியைகள், தர்ப்பணங்களை செய்யும் போது அதே பூணூலை வலது தோளிலிருந்து அணிந்திருப்பர்.

மாலையாக- ரிஷிகள், முனிவர்களுக்கு தர்ப்பண வழிபாடுகளை செய்யும் போதும், உடலுறவு கொள்ளுதல், நித்திரை செய்தல் போன்றவற்றின் போதும் இவ்வாறு அணிந்து கொள்வர்.

இதை விட, இயற்கைக்கடன்களை நிறைவேற்றும் போது, பூணூலை வலது காதில் சேர்த்துக் கொள்வர்.

தீட்டு நீங்கிய போதும், ஆவணி அவிட்டத்தின் போதும், உடலுள சுத்தம் குன்றியதாக கருதிய போதும், பழுதுற்ற போதும், அறுந்த போதும் புதுப்பூணூல் மாற்றிக் கொள்வர்.

முதலில் உபநயனத்தின் போது (பூணூல் சடங்கில்) முப்புரி கொண்ட ஒரு நூலே அணிவிக்கப்படும். பிறகு திருமணமாகின்ற போது இருநூல்கள் அணிவர். இதைக் கொண்டே ஒருவன் திருமணமானவனா?

பிரம்மச்சாரியா? என்று கண்டு கொள்ளமுடியும். பிறகு சிலர் மூன்றாவதாக இன்னொரு நூலினையும் அணிந்து கொள்வர். பொதுவாக பூணூலுக்கு மேலே திருமணமானவர்கள் ஒரு வஸ்திரத்தை அணிந்து கொள்வது வழக்கம்.

சிவதீட்சை அல்லது வைணவ சம்ஸ்காரத்தைச் செய்து கொண்டவர்கள் சிலர் ஐந்து பூணூல்களையும் அணிந்து கொள்வதுண்டு.

சில மரபுகளில் சாற்றாத அதாவது பூணூல் அணியாத மரபினர் கூட, குறிப்பிட்ட சில வேளைகளில் மட்டும், அதாவது சிவபூஜை முதலியன செய்கிற போது மட்டும் பூணூலை அணிந்து விட்டு பிறகு களைவதையும் காண முடிகின்றது.

ஆனால், உபநயனத்தின் போது பூணூல் அணியும் வேதியர்கள் வாழ்வின் எந்த நிலையிலும் பூணூலை அகற்றக் கூடாது என்பதே விதியாக உள்ளது.

பூணூலை முறையாக காயத்திரி உபதேசம் பெற்று அணிந்து கொண்டவர்கள் தினமும் காயத்திரி ஜெபத்தோடு கூடிய சந்தியாவந்தனம் செய்ய வேண்டும். பல ஆச்சாரங்களை பின்பற்ற வேண்டும். அந்த பூணூல் இறையம்சமாக தெய்வாம்சமாக இருப்பதால் தேவையற்றவற்றை(டாலர், திறப்பு) போன்றவற்றை அதில் சேர்க்கக்கூடாது. இந்த பூணூலை இறைவனும் அணிந்திருப்பதை காணலாம்.

"வேதமோதி வெண்ணூல் பூண்டு.." என்று திருமுறைகளும் அதனை சிறப்பித்துப் பேசும். 'யக்ஞோபவீதம் பரமம் பவித்ரம்" என்று இந்த பூணுலானது மிகத்தூய்மையானது என்றே அழுத்தமாக சொல்லப்படுகிறது.

ஆக, பூணூல் அணிவது ஆன்மீக வாழ்வின் நுழைவுச்சீட்டாக அமைவதுடன், பெண்களுக்கான திருமாங்கல்யம் போல அது வேதஞானத்தின் ஊற்றாகவும் திகழ்கின்றது.

## ஸ்ரீ ருத்ரம்

யஜுர் வேதத்தின் தலையாய பகுதி இதுவாகும். இதன் இருதயத்தில் பஞ்சாட்சரம் துலங்குகிறது. இதை சதருத்ரீயம் என்பர்.

சிவபெருமானை பலவாறு போற்றும் இப் பகுதிக்கு பலரும் உரை செய்திருக்கிறார்கள்.

ருத்ரஜெபத்தை மிகச் சிறப்பாக போற்றுவர்.

## 6. காயத்ரீ

காயத்ரீ என்ற மந்த்ரமே வேதத்தின் ஊற்றாக வேதமாதாவாக (காயத்ரீ சந்தஸாம் மாதா) விளங்குவது. காயந்தம் த்ராயத இதி காயத்ரீ என்பது வாக்கியம். அதாவது தன்னை ஜபிப்பவனை காப்பதால் இது காயத்ரீ எனப்படுகின்றது.

அந்தணர்களுக்கு மூத்த சகோதரி போன்றவள் என்றும், தாய் போன்றவள் என்றும் காயத்ரீ பேசப்படுகிறாள். விஸ்வாமித்ரர் என்கிற முனிவர் முதலில் அரசராக இருந்தவர். பிறகு காயத்ரீஜெப வலிமையால் திரிசங்குவுக்கு புதிதாக ஒரு உலகத்தையே படைப்பேன். அவனை இந்திரனாக ஆக்குவேன் என்றெல்லாம் வலிமையோடு திகழ்ந்தார். அது காயத்ரீ கொடுத்த பலமே ஆகும்.

அதனால் உன்னதமான காயத்ரீ மஹாமந்திரத்தை தினமும் பன்முறை ஜபம் செய்யுமாறு சாஸ்திரங்களில் ப்ராம்மணர்களுக்கு கட்டளை இடப்பட்டிருக்கிறது.

"தத்- ஸவிதுர்வரேண்யம்- பர்கோ- தேவஸ்ய
தீமஹி- தி யோ யோ ந: பிரசோதயாத்" என்பது காயத்ரீ.

இதற்கு முன், ஓம் என்ற பிரணவத்தையும், பூர்புவஸ்ஸுவ என்ற வியாஹ்ருதியையும் சேர்த்து ஜபிப்பார்கள்.

"எவர் எமது புத்தியை தூண்டுகிறாரோ, அப்படிப்பட்ட ஒளிமிக்கவரான உலகைப்படைத் தவருடைய மிகவும் உயர்ந்ததான ஒளியை த்யானிக்கிறோம்"

ஆக, சூரியனை- சக்திவடிவமான காயத்ரீ தேவியை- மறைபொருளாய் நிற்கும் பரம்பொருளான (சைவர்களுக்கு சிவம், வைஷ்ணவர்களுக்கு விஷ்ணு இப்படி) இறைவனை சிந்திக்கத் தூண்டும் உன்னதமான மந்த்ரம் இதுவாகும்.

இந்த ஒரு மந்த்ரமே காலையில் காயத்ரீ என்றும் மதியம் சாவித்ரீ என்றும் மாலையில் சரஸ்வதீ என்றும் பெயர் பெறுகிறது.

காயத்ரீநாம பூர்வாஹ்ணே ஸாவித்ரீ மத்யமே தினே/
ஸரஸ்வதீச ஸாயாஹ்நே ஸைவ ஸந்த்யா த்ரிஸு ஸ்ம்ருதா//

இது வேறு மந்த்ரங்களுக்கு இல்லாத தனிச்சிறப்பாகும். இதனை உபதேசம் செய்வதையே "ப்ரஹ்மோபதேசம்" என்று குறிப்பிட்டுப் போற்றுவார்கள். காயத்ரீயின் பெருமையும் அதனை ஜபிப்பதால் உண்டாகும் பயனும் சொல்லற்கரியது என்று உபநிடதங்களிலும், புராண இதிஹாசங்களிலும் இம்மந்த்ரம் சிறப்பிக்கப்பட்டிருக்கிறது. காயத்ரீயை விட்டவன் பிராம்மணனாக மாட்டான். காயத்ரீயை விடுவது தாயை தியாகம் செய்வது போன்றது என்றெல்லாம் பல செய்திகள் காயத்ரீ மந்திர ஜபம் பற்றி உள்ளன.

காயத்ரீ மந்திர பலன் பற்றியும் பல்வேறு கதைகள் உள. நாமும் காயத்ரீயை ஜபித்து அன்னையான அவளது கருணைக்கு பாத்திரராவோமாக.

காயத்ரி ஜெப முறை






## வியாசர்

வேத வியாசர், கிருஷ்ண த்வைபாயனர் என்றெல்லாம் அழைக்கப்படும் இம் மாமுனிவரே வேதங்களை தொகுத்தவர்.

மகாபாரத்தையும், பதிணெண்புராண நூல் களையும் பிரம்ம சூத்திரத்தையும். கிருஷ்ணனின் திருவாக்கான பகவத்கீதையையும் எழுதியவரும் இவரே.

பராசரர் - மச்சகந்தி ஆகியவர்களின் புதல்வரான இவர் திருமாலின் வடிவமாக போற்றப் படுகிறார். கரு நிறமுடையவர்.

இம்மாமுனிவரை போற்றுவதும், அவரை வழிபடுவதும் இந்துக்களுடைய தலையாய கடனாகும்.

## 7. வேதம்– தர்மசாஸ்திரம்– சூத்திரங்கள்

இந்துக்கள் அனைவருக்கும் வேதமே முதற்பிரமாணமாகும். வேதத்தை ஸ்ருதி என்பர். வேத வழியில் தோன்றியவையே தர்மசாஸ்திரங்களான ஸ்மிருதிகளும், சூத்திரங்களுமாகும்.

வேதங்களை நான்காக வகுத்தவர் வேதவியாச மாமுனிவராவார். அவ்வாறு வியாசமாமுனிவர் வகுத்த நால்வேதங்களிலும் பல சாகைகள் உள்ளன. ஆயினும், கால ஓட்டமும் ஆதரிப்பார் இன்மையும், பல்வேறு சூழல்களாலும், பிற தேச அரசுகளின் ஆக்கிரமிப்புக் களாலும், வேதத்தை காத்த வேதியர் பிறருடன் கலந்து வேதம் காக்கும் கடமையினின்று தவறியமையும், அதிகளவான சாகைகள் இன்று இல்லாமலே போய் விட்டன. இப்போது, இருக்கிற வேதசாகைகளையும் அவற்றிற்கான வாழ்வியல் வழி முறைகளை (சூத்திரங்கள்) அருளிய முனிவர்கள் பற்றியும் சிறிது நோக்குவோம்.

இவ்வாறு வியாசர் அருளிய ரிக் வேதத்தில் 21 சாகைகள் இருந்ததாக சொல்லப்பட்டாலும், இன்று இருப்பவை இரண்டே. வடஇந்தியாவில் பாஷ்களசாகையும், தென்னிந்தியா மற்றும் இலங்கையில் சாகலசாகையும் மட்டுமே நடைமுறையில் உள்ளன. இரண்டாவதான சாகலசாகை ரிக்வேதியர்களுக்கு ஆஸ்வலாயன முனிவர் க்ருஹ்யசூத்ரத்தை அருளியிருக்கிறார்.

அதே போல, யஜுர்வேதிகளே தென்னிந்தியா மற்றும் இலங்கையில் அதிகளவில் வாழ்கிறார்கள். இந்த யஜுர்வேதத்தில் வியாசர் வகுக்கிற போது 101 சாகைகள் இருந்தன. இன்று இருப்பது மூன்று மட்டுமே. அதிலும் யஜுர்வேதமானது இருவகைப்படும். ஒன்று கிருஷ்ணயஜுர்வேதம், மற்றையது சுக்லயஜுர்வேதம். அவற்றில் இலங்கை மற்றும் தமிழ்நாட்டில்

கிருஷ்ணயஜுர்வேதிகளே அதிகளவில் உ ளர். இதுவே யஜுர்வேதத்தில் பழைமையானதுமாகும். அந்த கிருஷ்ண யஜுர்வேதத்தில் 86 சாகைகள் இருந்ததாக குறிப்புகள் உ ண்டு. ஆனால் இன்று இருப்பது தைத்திரீயசாகை என்ற ஒன்று மட்டுமே. இந்த தைத்ரீயசாகையைச் சேர்ந்தவர்களுக்கு கிருஹ்யசூத்ரத்தை அருளியவர் போதாயனர் என்கிற முனிவர். இதனை போதாயனசூத்ரம் என்பர்.

போதாயனமுனிவரை தொடர்ந்து வந்தவர் ஆபஸ்தம்பர் என்ற மாமுனிவர். இவர் போதாயனர் செய்த சூத்ரத்தை எளிமைப்படுத்தி, எல்லோரும் பின்பற்றக்கூடிய வகையில் கிருஹ்யசூத்ரம் அருளினார். இவரது வாழ்வியற்கிரியை மரபான ஆபஸ்தம்பசூத்ரத்தையே இலங்கையிலுள்ள தொண்ணூறுவீதத்திற்கும் அதிகமான பிராமணமரபினர் பின்பற்றி வருகின்றனர். தென்னிந் தியாவிலும் அதிகளவானவர்கள் ஆபஸ்தம்ப சூத்ரத்தைச் சேர்ந்தவர்களே.

இவ்வகையில், சுக்லயஜுர்வேதத்தையே வடஇந்தியாவில் அதிகளவில் பின்பற்றுகின்றனர். இதில் 15 சாகைகள் இருந்தனவாம். இன்று கர்ண்வசாகை, மாத்யந் தினசாகை என்று இருசாகைகளே உ ண்டு. இவ்விரு சாராருக்கும் காத்யாயனர் என்கிற முனிவர் சூத்ரம் அருளியிருக்கிறார். இந்த சாகையை சேர்ந்தவர்கள் இலங்கையில் இருப்பதாக அறிய இயலவில்லை.

மூன்றாவது வேதமான சாமவேதத்தில் 1000(சுமார் ஆயிரம்) சாகைகளை வேதவியாசர் வகுத்தார். ஆனால், இன்று சாமவேதிகளே மிகக்குறைவு. ஆகவே, இந்த ஆயிரத்தில் ராணாயணீயசாகை, கௌதுமசாகை, ஜைமினி சாகை என்ற 3 மட்டுமே மிஞ்சியுள்ளன. இதில் தென்னிந் தியாவில் ரணாயணீய சாகைக்காரர்கள் மட்டுமே உ ளர்.

இவர்கள் த்ராஹ்யாயனருடைய சூத்ரத்தை பின்பற்றுகின்றனர்.


வியாசர் வழங்கிய அதர்வணவேதத்தில் 9 சாகைகள் இருந்தன. இன்று இருப்பது இரண்டே. சௌனகசாகை, பிப்பலாதசாகை என்பன அவை. ஆனால் இவற்றை பின்பற்றுபவர்கள் எங்கிருக்கிறார்கள்? எப்படி பின்பற்றுகிறார்கள் என்றெல்லாம் என்னால் அறிய முடியவில்லை. இவற்றுக்கு கௌசிக முனிவர் கிருஹ்யசூத்ரம் அருளியுள்ளார். இலங்கையில் சாம-அதர்வண வேதிகள் இன்று இல்லை என்றே குறிப்பிடலாம்.

இவ்வாறான க்ருஹ்யசூத்ரங்கள் வாழ்வியற் கிரியைகளையே அதிகம் பேசும். வேதம் சொன்ன படி எப்படி பூர்வ-அபர கிரியைகளை செய்து கொள்வது என்றே இவை குறிப்பிடுகின்றன. இவற்றை விட, தர்மசாஸ்திரங்கள் பலவுண்டு. அதிலே மனுஸ்மிருதி, பராசரஸ்மிருதி போன்றவை பிரபலமானவையாகும்.

க்ருஹ்யசூத்ரம் போல, ச்ரௌதசூத்ரங்களும் உள்ளன. அவை நேரடியாக வேதப்பிரமாணத்தை கொண்டு வேத வேள்விகளான வாஜபேயம் முதலியன செய்யும் முறையை விவரிப்பன. இவ்வாறான வேள்விகள் ஏறத்தாழ 400 உள்ளன. அவற்றில் 21 முக்கியமானவை. இந்த வேள்விகள் எல்லா வேதிகளுக்கும் பொதுவானவை.

இவ்வாறு வேதவேள்வி செய்கிறவர்களை இப்போது காண்பதே அரிது. ஆயினும் பழைய காலத்தில் நிறைய இருந்திருக்கிறார்கள் போலும். அதனாலேயே, "முடியா முத்தீ வேள்வி", "முத்தீ ஓம்பல்", "முத்தீ பேணல்" என்றெல்லாம் இது பழந்தமிழ்நூல்களில் சிறப்பாக பேசப்பட்டிருக்கிறது.

வேதம் என்றால் என்ன?
வேதியர் என்போர் யாவர்?
வேதத்தை பழந்தமிழர் ஏற்றனரா?
சங்கத் தமிழ் நூல்கள் வேதம் பற்றி என்ன சொல்கின்றன?
திருமுறையாசிரியர்கள் வேதத்தை ஏற்றனரா?
பூணூல் குறிப்பது என்ன?
வேதத்திற்கான விழா உண்டா?
என்று அலசும் சிறு கைநூல்.



ஷாம்பவி பதிப்பகம், யாழ்ப்பாணம்.